# சி. ராஜகோபாலாச்சாரி (ராஜாஜி)

# (10 டிசம்பர் 1878 - 25 டிசம்பர் 1972)

**ஆக்கம்**

**கோ.ஸ்ரீராம்**

தயவு செய்து காலம் அகாடெமி மாணவர்கள் இதில் உள்ள தகவல்களை கட்டாயம் படிக்கவும் ...ப்ளீஸ்...ப்ளீஸ்

1. தமிழகத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில்(அன்றைய சேலம்மாவட்டத்தில்) ஓசூருக்கு அருகில் உள்ள தொரப்பள்ளி என்னும் கிராமத்தில் பிறந்த இந்திய விடுதலைப் போராட்ட வீரர் ஆவார்.
2. சுருக்கமாக **ராஜாஜி** என்றும் **சி.ஆர்** என்றும் அழைக்கப்பட்டவர்.
3. வழக்கறிஞர், எழுத்தாளர், அரசியல்வாதி .
4. **சேலத்து மாம்பழம்** என செல்லப் பெயர் கொண்டவர்.
5. 1917 இல் சேலம் நகராட்சி உறுப்பினராகவும் பின்னர் நகர தந்தையாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்
6. 1930 ஆம் ஆண்டு மகாத்மா காந்தியின் தண்டியாத்திரையை ஒட்டி வேதாரண்யத்தில் உப்பு சத்தியாகிரகம் நடத்தி சிறை சென்றார்.
7. 1937 ஆம் ஆண்டு மதராஸ் மாகாணத்தின் முதன்மை மந்திரியாக பொறுப்பேற்று 1940 வரை பதவி வகித்தார்
8. 1937 ஆம் ஆண்டு பிற காங்கிரசு ஆட்சி மாகாணங்களில் இல்லாத திட்டமான **இந்தி மொழி கட்டாயப்பாடத் திட்டத்தைக் கொணர்ந்தவர்**.
9. அவர் சென்னை மாகாணத்தின் முதலமைச்சராக 1937ஆம் ஆண்டில் பொறுப்பேற்ற பின்னர், அன்றைய சேலம் மாவட்டத்தில் மதுவிலக்கை

அமல்படுத்தினார். அதனால் ஏற்பட்ட வருவாய் இழப்பை ஈடுகட்ட **1939ஆம் ஆண்டில் விற்பனைவரியை விதித்தார்.**

10. 1952ஆம் ஆண்டில் சென்னை மாகாண முதல்வராக இரண்டாம் முறை இருந்தபொழுது மாகாணம் முழுக்க **மதுவிலக்கை அமல்படுத்தினார்.**
11. காந்தியின் **வெள்ளையனே வெளியேறு போராட்ட முடிவிற்கு எதிர்ப்பு** தெரிவித்தார்
12. போர்க்காலத்தில் பிரிட்டானியாவுடன் ஒத்துழைக்க வேண்டும் என்பது அவரது கருத்தாக இருந்தது.
13. முகமது அலி ஜின்னாவுடனும் அகில இந்திய முஸ்லிம் லீக்குடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவு காண விழைந்தார். **இவரது திட்டம் *சி ஆர் பார்முலா*** என அழைக்கப்பட்டது.(1944)
14. 1946 ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட இடைக்கால அரசில் தொழில், வழங்கல், கல்வி மற்றும் நிதித்துறை அமைச்சராக பணியாற்றினார்.

## வகித்த பதவிகள்

1. 1947 முதல் 1948 வரை மேற்கு வங்க ஆளுனராகவும்
2. 1948 முதல் 1950 வரை **இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரலாகவும்**
3. 1951 முதல் 1952 வரை உள்துறை அமைச்சராகவும் பணியாற்றினார்.
4. சென்னை மாநிலத்தின் முதலமைச்சராக 1952 முதல் 1953 வரை பதவி வகித்தார்
5. 1954 ஆம் ஆண்டு இந்தியாவின் உயரிய குடிமையியல் விருதான பாரத ரத்னா விருது இவருக்கு வழங்கப்பட்டது

# சுதந்திராக் கட்சி (1959)

1. **சுதந்திராக் கட்சி** (*Swatantra Party*) ஆகத்து 1959ஆம் ஆண்டு சவகர்லால் நேருவின் சோசலிசக் கொள்கைகளுக்கு எதிராக இராசாசி மற்றும் என். ஜி. ரங்காவால் தோற்றுவிக்கப்பட்ட ஓர் இந்திய அரசியல் கட்சியாகும்.

2. தாராளமயத்தை கொள்கையாகக் கொண்ட சுதந்திராக் கட்சியை நிறுவி 1962,1967 மற்றும் 1972 பொது தேர்தல்களில் போட்டியிட்டார்
3. தமிழக அரசியலில் முதன்முறையாக காங்கிரசல்லாத ஆட்சி மலர துணை நின்றார்.
4. அவருடன் கூட்டணி கண்ட சி.என்.அண்ணாதுரை முதலமைச்சராக பொறுப்பேற்றார்.
5. நாடாளுமன்றத்திலும் சுதந்திராக் கட்சி 45 இடங்களைப் பிடித்து முதன்மை எதிர்கட்சியாக விளங்கியது.

# குலக்கல்வித் திட்டம் (1953 ஏப்ரல் )

1. (ராஜாஜி) -தொடக்கக் கல்வி முறையில் சில மாற்றங்களைக் கொண்டு வர முயன்றார்.
2. பள்ளிக்காலம் நாளொன்றுக்கு மூன்று மணி நேரமாகக் குறைக்கப்பட்டது. மீதமுள்ள நேரத்தில் அவர்கள் தங்களது பெற்றொரின் தொழிலைக் கற்றுக்கொள்ள வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.
3. இக்கல்விமுறை ஜாதிஅமைப்பை பலப்படுத்தும் **குலக் கல்வித் திட்ட**மென திராவிடர் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற கட்சிகள் எதிர்த்தன.
4. 1953 ஏப்ரல் மாதத்தில் இத்திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது
5. ஆகஸ்ட் 1953 இல் பருலேக்கர் குழு இத்திட்டம் முறையானதுதான் என்று அறிக்கை வெளியிட்டது.
6. **ராஜாஜி** மார்ச் 1954 இல் தன் பதவியை ராஜினாமா செய்தார்.
7. மே 18 1954 இல் கல்வி அமைச்சர் சி. சுப்ரமணியம், பொது மக்களின் எதிர்ப்பால் திட்டம் கைவிடப்படுவதாக சட்டமன்றத்தில் அறிவித்தார்.

## <u>படைப்புகள்</u>

| | |
|---|---|
| • வியாசர் விருந்து -1946 | • சக்கரவர்த்தித் திருமகன் 1958 |

| | |
|---|---|
| • திண்ணை ரசாயனம் | • கண்ணன் காட்டிய வழி |
| • பஜகோவிந்தம் | • கைவிளக்கு |
| • உபநிஷதப் பலகணி<br>• பிள்ளையார் காப்பாற்றினார்<br>• ஆற்றின் மோகம்<br>• வள்ளுவர் வாசகம்<br>• ராமகிருஷ்ண உபநிஷதம்<br>• ரகுபதி ராகவ<br>• முதல் மூவர் (மீ.ப.சோமுவுடன்) | • ரகுபதி ராகவ<br>• மெய்ப்பொருள்<br>• பக்திநெறி<br>• ஆத்ம சிந்தனை<br>• வேதாந்த தீபம்<br>• ஸோக்ரதர்<br>• திருமூலர் தவமொழி (மீ.ப.சோமுவுடன் |

ஆக்கம்

கோ.ஸ்ரீராம்